**சுருக்கம்**

சமூக நலன் - 2010 -2011 ஆம் ஆண்டின் பகுதி II திட்டம் – சென்னை, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் செயல்படும் ஐந்து அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு இரும்பு அடுக்கு கட்டில்கள் வழங்க ரூ.50.00 இலட்சம் செலவினம் ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந 5) துறை

அரசாணை(நிலை) எண். 118, நாள் 01 –06–2010

வைகாசி 18, திருவள்ளுவர் ஆண்டு 2041

**படிக்க:**

1 அரசாணை (நிலை) எண்.105, சமூக நலம் மற்றும் சத்துணவு த் திட்டத் துறை, நாள் 12.08.09

மீண்டும் படிக்க :

2 சமூக நல ஆணையரின் கடித எண்.45518/கணக்கு1(2)/2009, நாள் 30.12.09

----

**ஆணை:**

சமூக நலத் துறையின் கீழ் 27 அரசு குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் உள்ளுறைவோர்களுக்கு கல்வி, உடை, உறைவிடம் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு சுருக்கெழுத்து, தட்டச்சு, தொழிற்கல்வி மற்றும் கணினிப் பயிற்சி ஆகியவையும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கல்வி பயின்று வெளியேறும் பெண்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, வால்டாக்ஸ் சாலையிலுள்ள அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு, 2009-2010 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஓர் ஈரடுக்கு இரும்பு கட்டில் ரூ.5,000/- வீதம் 100 கட்டில்கள் வாங்கி வழங்க ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. சமூக நல ஆணையர் தனது கருத்துருவில் 27 அரசு குழந்தைகள் காப்பகங்களில் 5750 உள்ளுறைவோர்கள் உள்ளனர் என்றும், பல அரசு குழந்தைகள் காப்பகங்கள் நகர எல்லைகளுக்கு வெளியே உள்ளதால் அங்கு வசிக்கும் குழந்தைகள் அவ்வப்பொழுது பூச்சிகடிகளுக்கு ஆளாக நேரிடுகிறது என்றும், மேலும் அவர்கள் உறங்குவதற்கான பாதுகாப்பான இடம் குறைவு என்றும் இதன் காரணமாக அவர்களுக்கு இரும்புக் கட்டில் வழங்கினால் உறங்குவதற்கு பயனுள்ளதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்றும், ஏற்கெனவே சென்னை-1ல் உள்ள அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு 100 ஸ்டீல் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து சென்னை-2,

தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களிலுள்ள 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஒரு குழந்தைகள் காப்பகத்திற்கு 200 இரும்பு அடுக்கு கட்டில்கள் வீதம் ஒரு கட்டிலின் விலை ரூ.5,000/–வீதத்தில் 1000 அடுக்கு கட்டில்கள் வாங்கி வழங்க ரூ.50.00 இலட்சம் தேவைப்படுவதாகத் தெரிவித்து, அச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சமூக நல ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, சென்னை -2, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு தலா 200 இரும்பு அடுக்கு கட்டில்கள் வீதம், 1000 இரும்பு அடுக்கு கட்டில்கள் ஒரு இரும்பு அடுக்கு கட்டிலின் விலை ரூ.5,000/- வீதத்தில் 2010-2011 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின் கீழ் வாங்கி வழங்க ரூ.50.00 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2235– சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 சமூக நலன் -104 முதியோர் இயலாமையுற்றோர் ஆதரவற்றோர் நலன் - பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் –KJ – அரசால் தொடங்கப்பட்ட அனாதை இல்லங்களைப் பராமரித்தல் 05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
> (து.தொ.கு.2235 -02-104-KJ-0558) "

5. இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன் அதன் அ.சா.எண்.28208 / சந /10 நாள் 27/05/10 -ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி.தனவேல்,
அரசு செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை-5
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5
மாநிலக் கணக்காயர், சென்னை -18 (பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக)

நகல்
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதித் துறை, சென்னை-9
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் ( சந 2) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்